அசல்

6.4.41. V. Swaminathaiyar.

அசல் -1

MAHAMAHOPADHYAYA
DAKSHINATYA KALANIDHI
DR. V. SWAMINATHAIYAR,
MADRAS.

உ
சிவமயம்

TYAGARAJA VILAS,
TIRUVETTISWARANPET
Triplicane, 6.4. 1941.

78

அன்புள்ள ஐயா,

தாங்கள் அனுப்பிய "இதய ஒலி" என்ற கட்டுரைத் தொகுதி கிடைத்தது. துக்கத்தில் ஆழ்ந்திருக்கிற தாங்கள் ஞாபகம் வைத்து இங்கிருந்து போனவுடனே அனுப்பியது பற்றி என் நன்றியறிவைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் புஸ்தகத்தில் உள்ள விஷயங்களில் பெரும்பாலனவற்றை முன்பே படித்திருக்கிறேன். இப்போதும் படிக்கக் கேட்கிறேன். இனியும் கேட்பேன். கேட்கக் கேட்கச் சுவை முதிர்கின்றதே ஒழியத் தளர்ச்சி தோன்றவில்லை.

இதயத்தில் எழுகின்ற ஒலிகளை இந்த ரூபத்தில் எழுதும் திறமை உங்களிடம் இருப்பதைத் தமிழ்நாட்டார் வெகுகாலமாக அறிந்து ஸந்தோஷமடைந்திருக்கிறார்கள். தங்கள் கட்டுரைகளைச் சேர்த்து அச்சிட்டுக் கொடுத்திருக்கும் உபகாரத்தை அவர்கள் பாராட்டிப் பயன்படுத்திக் கொள்வார்களென்பதில்

அசல்

6.4.41. V. Swaminathaiyar.

✓

அசல் -1

13 6/4/41

தடை இல்லை.

சொல்லுகிற விஷயத்தை மற்றவர்கள் ஸந்தோஷமாக அநுபவித்துக் கேட்கும்படி சொல்வதென்பது எல்லோருக்கும் வராது. அந்த விஷயத்தைத் தாங்களே அநுபவிக்காமல் பேச வரும்போது மற்றவர்களுக்கு எப்படித் தெளிவாகும். தாங்கள் முதலில் அநுபவிக்கிறீர்கள், ஒருமுறையல்ல, பலமுறை அநுபவிக்கிறீர்கள். உங்கள் இதயத்தைத் தொட்டு எழும் அந்தச் சுவை மிகுந்த உணர்ச்சி ஒலிக்கிறது; உரையாக எழுத்தாக ஒலிக்கிறது. அப்படி உணர்ந்து எழுந்த அந்த ஒலி மற்றவர்கள் இதயங்களையும் தொட்டு இன்புறுத்துகிறது.

ருசிகண்ட தமிழர்கள் இன்னும் வேண்டும், வேண்டுமென்று உங்களைக் கேட்டுத் தொந்தரவு கொடுக்கப் போகிறார்கள். அவர்கள் அவாவைத் தணிக்கும் முயற்சிக்கு ஏற்ற மன அமைதியையும், ஆரோக்கியத்தையும், சௌகரியத்தையும் தங்களுக்கு அருளும் வண்ணம் இறைவனைச் சிந்திக்கின்றேன்.

இங்ஙனம்,

அய்யர்